# <u>ஓசோன் தின வினாடி வினாப் போட்டி</u>

புதுச்சேரி அறிவியல் தொழில்நுட்பத்துறையும், கல்வித்துறையின் மாநிலப் பயிற்சி மையமும் இணைந்து காலாப்பட்டு பெண்கள் மேனிலைப்பள்ளியில் ஒசோன் தின விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது.

பள்ளித்தலைமை துணைமுதல்வர் முருகானந்தம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விரிவுரையாளர் ராமமூர்த்தி அனைவரையும் வரவேற்றார். உலக ஓசோன் தினத்தையொட்டி மாணவ மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இவ்விழவில் புதுச்சேரி கல்வித்துறையின் சுற்றுச்சூழல் கல்விப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் பூபதி கலந்து கொண்டு ஓசோன் படல பாதிப்பு பற்றியும், அதனைத் தடுக்க நாம் மேற்கொள்ளவேண்டிய வாழ்க்கை முறைகளையும் எடுத்துக் கூறினர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

விரிவுரையாளர் பொன்னுரங்கம் நன்றி கூறினார்.




அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி
ஓசோன் நாள்
சனிக்கிழமை